சுற்று நிருபம் - 04/2017(i)

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடமாகாணம்
18/9 வைமன் வீதி
நல்லூர்.
24.09.2020

**சுற்று நிருப இல 04/2017 இற்கான வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் விசேடபடிக் கொடுப்பனவு திருத்தம் செய்தல் தொடர்பாக.**

சுற்றுநிருபம் 04/2017 இலக்கம் கொண்ட கூட்டுறவு ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் விசேட செயலாற்றுகை கொடுப்பனவு என்ற விடயம் கொண்ட சுற்றறிக்கையின் 3 ஆவது பிரிவில் 1 ஆவது உபபிரிவு வாழ்க்கைச் செலவுப்படிக் கொடுப்பனவு என்ற விடயம் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரது அனுமதியைப் பெற்று மாதாந்தம் வழங்குதல் வேண்டும் என்பது நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக இயக்குனர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் மாதாந்தம் வழங்குதல் வேண்டும் எனவும் இதே வேளை இயக்குனர் சபையின் உறுதிப்படுத்தலுடன் இக் கணக்குகள் யாவும் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பிவைத்தல் வேண்டும் என திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

முதல் மாதத்திற்குரிய கொடுப்பனவை பணியாளர்கள் அடுத்த மாதம் பெற்றுக்கொள்ளலாம்.

சுற்றறிக்கை 04/2017 இன் 3ஆவது பிரிவு மாற்றியமைக்கப்பட்டதன் காரணத்தால் அச்சுற்றறிக்கையின் இறுதிப்பந்தியான ஏ பிரிவின் முதல் இரு வரிகளுமான மேற்குறிப்பிட்ட“2, 3 கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் முன் அனுமதியினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்” என்பது

மேற்குறிப்பிட்ட “2”ஆவது பிரிவு கொடுப்பனவை (சேவைக்கால வெகுமதிக் கொடுப்பனவு) மேற்கொள்வதற்கு முன்பு (ஆரம்பிக்கும் போது மட்டும்) மாவட்ட அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களின் முன் அனுமதியை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என மாற்றியமைக்கப்படுகின்றது.

இச் சுற்றறிக்கையானது பணியாளர்கள் குறித்த கொடுப்பனவை அடுத்து வரும் மாதத்திலேயே பெற்றுக்கொள்வதற்கேதுவாக மாற்றியமைக்கப்படுகின்றது.

23.09.2020 ஆம் திகதிய ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படியானது.

த.உமா
செயலாளர்

த. உமா
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு